10/=
பக்கங்கள் 06
Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி
Ethiroli

குரல் 01 அதிர்வு 135 புதன்கிழமை ஒக்ரோபர் 04 2017 ethirolimedia@gmail.com 021 300 48 48

## உயர் நீதிமன்றில் தீ விபத்து

உயர் நீதிமன்றத்தின் நீதவான்களின் உத்தியோகபூர்வ அறையில் இன்று தீப்பற்றியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து, வழக்கு நடவடிக்கைகளுக்காக வந்திருந்த, வழக்கறிஞர்கள் உள்ளிட்ட குழுவினரை அங்கிருந்து வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மின் ஒழுக்குக் காரணமாகவே இந்தத் தீப்பரவல் ஏற்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது.

இதனால், உயர்நீதிமன்றத்தின் வழக்கு நடவடிக்கைகளும் தற்காலிகமாகப் பிற்போடப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது. (உ)



துன்னாலை வல்லிபுர ஆழ்வார் கோவில் தேர்த்திருவிழா இன்று நடைபெற்றது. (உ–11)

## அகதிகள் மீது தாக்குதல் தேரர் உட்பட இருவர் தலைமறைவு

மியன்மார் றோஹிங்யா அகதிகள் தடுத்து வைக்கப்பட்டிருந்த கல்கிஸையில் உள்ள வீட்டின் மீது தாக்குதல் நடத்தப்பட்ட விவகாரம் தொடர்பில், கொழும்பு குற்றப் பிரிவால் தேடப்பட்டு வருகின்றவர்களில் இருவர் தலைமறைவாகியுள்ளனர் என்று பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

கிருலப்பனை பூர்வாராம விஹாரையைச் சேர்ந்த, அருவோபொல ரத்னசார தேரர் முதலாவது சந்தேகநபராவர். இரண்டாவது சந்தேக நபர், வாதுவை, மஹாவாதுவைச் சேர்ந்த பீகின் ஜானக குணதிலக்க என்பவராவார் என்று தலைமையகம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில், இரண்டாவது சந்தேக நபர், இலங்கைப் பொலிஸில் கடமையாற்றிய முன்னாள் பொலிஸ் கான்ஸ்டபிள் ஆவார்.

அவர், கடமையிலிருந்து 06

## ஆடைத்தொழிற்சாலையில் 200 பெண்கள் திடீர் மயக்கம்



ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் கடமையிலிருந்த பெண் பணியாளர்கள் சுமார் 200 பேர் திடீரென மயக்கமுற்ற நிலையில் டிக்கோயா மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இன்று காலை 9.45 .மணியளவில் இந்தத் திடீர் அசம்பாவிதம் இடம்பெற்றுள்ளது. நோர்வூட் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நிவ்வெளி பகுதியிலுள்ள தனியாருக்குச் சொந்தமான ஆடைத் தொழிற்சாலையிலேயே இந்தச் சம்பவம் நிகழ்ந்துள்ளது. ஆடைத்தொழிற்சாலையில் வழங்கப்பட்ட காலை உணவின் ஒவ்வாமையினால் மயக்கம் ஏற்பட்டிருக்கலாம் என நோர்வவூட் பொலிஸார் தெரிவித்ததுடன், மேலதிக விசாரணை தொடர்வதாகவும் நோர்வூட் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (எ)

## அரசியல் கைதிகளுக்காக யாழ். பல்கலை மாணவர்கள் போராட்டம்



தமிழ் அரசியல் கைதிகளின் பிரச்சினைக்கு உரிய தீர்வைவழங்கக் கோரியும், உண்ணாவிரதக் கைதிகளின் கோரிக்கையை உடனடியாக தீர்க்க கோரியும் யாழ். பல்கலைக்கழக சமூகத்தினர் இன்று புதன்கிழமை காலை கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றினை மேற்கொண்டுள்ளனர்.

யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இன்று காலை 10.15 மணிக்கு இந்தக் கவனயீர்ப்புப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதன் போது பல்கலைக்கழக நுழைவாயில் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் பெருமளவில் ஒன்றுகூடிய மாணவர்கள் 06

## அதிருப்தி




தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீது வடக்கு மாகாண மக்களிடத்தில் அதிருப்தி நிலை காணப்படுவதாக முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின், யாழ்ப்பாணத்துக்கான அங்கத்தவர்களை இணைப்பதற்கான நடவடிக்கையில் அண்மையில் ஈடுபட்ட அவர் கொழும்பில் நடத்திய ஊடகச் சந்திப்பொன்றின்போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அபிவிருத்திப் பணிகள், வடக்கில் முழுமூச்சாக இடம்பெறுவதில்லை எனத் தெரிவித்த பசில், 06

## கஞ்சாவுடன் மூவர் கைது



வவுனியா - சாம்பல் தோட்டம் பகுதியில் கேரளக் கஞ்சாவினை தம்வசம் வைத்திருந்த நால்வரை நெளுக்குளம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த சந்தேகநபர்கள் நால்வரும் நேற்று இரவு 8.30 மணியளவில் கைது 06

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடப்பு யாப்பிலும் பௌத்தத்துக்கு முன்னுரிமை இல்லையாம்



வழிகாட்டல் குழுக்களின் இடைக்கால அறிக்கையில், பௌத்தத்துக்கு வழங்கப்பட்டுள்ள முன்னுரிமை நீக்கப்பட்டுள்ளதெனச் சில தரப்புகள் கூறிவருகின்றன. ஆனால் தற்போது காணப்படும் அரசமைப்பிலும் கூடப் பௌத்தத்துக்கு விசேட இடம் வழங்கப்படவில்லை என அமைச்சரும் ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலாளருமான சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகச் சந்திப்பில்,

“தற்போதைய அரசமைப்பில் பௌத்த மதம் தொடர்பாகக் காணப்படும் உறுப்புரை 9, சரியான முறையில் விளக்கப்படவில்லை. அந்த உறுப்புரை, பௌத்த மதத்துக்கு விசேட சிறப்புரிமைகளையோ அல்லது விசேட இடத்தையோ வழங்கவில்லை. அங்கு குறிப்பிடப்பட்டுள்ளது வெறுமனே சோடனை தான். ஆனால், அதைக் கூட நீக்குவதற்கு முயற்சி எடுக்கப்பட்டால், நாங்கள் அதற்கு எதிர்ப்புத் தெரிவிப்போம். என்ன நடந்தாலும், பௌத்தம் என்பது, எங்களது பாரம்பரியத்தின் அங்கம். பௌத்தத்தின் அமைதியான தன்மை காரணமாக, ஏனைய மதங்களுக்கு, எந்த விதமான பாதிப்பும் ஏற்படவில்லை. அந்த உறுப்புரை, மாற்றப்படாமல் இருக்க வேண்டும்” எனத் தெரிவித்தார். (உ)

# எதிர்வரும் நாட்களில் மழை பெய்யும்

நாட்டின் பல பகுதிகளிலும், எதிர்வரும் நாட்களில் மழை பெய்யக் கூடிய சாத்தியக் கூறுகள் உள்ளதாக, வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

சப்ரகமுவ மாகாணத்தில் இடையே மழை பெய்யுமெனவும் மேற்கு, வடமேற்கு மத்திய மாகாணம் மற்றும் காலி, மாத்தறை ஆகிய மாவட்டங்களிலும் மழை பெய்யும் எனவும் அத்திணைக்களம் கூறியுள்ளது. வடக்கு, கிழக்கு உள்ளிட்ட ஏனைய மாகாணங்களில், மாலை 2 மணிக்குப் பின்னர் மழை பெய்யுமென்றும் அத்திணைக்களம் கூறியுள்ளது. (உ)



# ரயில் விபத்துக்களில் 380 பேர் பலி!

இந்த ஆண்டின் முதல் ஒன்பது மாத காலப் பகுதியில் ரயில் விபத்துக்களினால் 380 பேர் வரையில் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ரயில் பாதுகாப்பு அதிகாரி அனுர பிரேமரட்ன, கொழும்பு ஊடகமொன்றுக்கு இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

ரயிலில் மோதுதல், தண்டவாளத்தில் தலை வைத்துத் தற்கொலை செய்து கொள்ளல், பாதுகாப்பற்ற ரயில் கடவைகளில் பயணித்தல், ரயில் பாதையில் செல்பி புகைப்படம் எடுத்தல் போன்ற காரணிகளினால் அதிகளவு மரணங்கள் பதிவாகியுள்ளன.

கடந்த ஒரு வார காலப் பகுதியில் கரையோர ரயில் பாதையில் ரயிலில் மோதுண்டு எட்டு பேர் வரையில் உயிரிழந்துள்ளனர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ)

# சிறுவர்களுக்கு எதிராக 9,361 வன்முறைகள் பதிவு



சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பாக, கடந்த வருடம் நாடளாவிய ரீதியில், 9,361 வன்முறைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளனவென, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை வெளியிட்டுள்ள புள்ளிவிபரத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைவாக, மலையகத்திலுள்ள 7 மாவட்டங்களில், 2,277 வன்முறைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதென, அத்தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பதுளை மாவட்டத்தில் 271 சம்பவங்களும் கண்டி மாவட்டத்தில் - 407, கேகாலை மாவட்டத்தில் -351,மொனராகலை மாவட்டத்தில் - 252, மாத்தளை மாவட்டத்தில் -307, நுவரெலியா மாவட்டத்தில் -211 மற்றும் இரத்தினபுரி மாவட்டத்தில் 593 சம்பங்களும் பதிவாகியுள்ளன.

அம்பாறை மாவட்டத்தில்183, அநுராதபுரம் 521, மட்டக்களப்பு 148, கொழும்பு 1271, காலி 635, கம்பஹா 917, ஹம்பாந்தோட்டை 412, யாழ்ப்பாணம் 169, களுத்துறை 558, கிளிநொச்சி 116, குருநாகலை 722, மன்னார் 68, மாத்தறை 307, முல்லைத்தீவு 119, பொலன்னறுவை 221, புத்தளம் 139, திருகோணமலை 139, வவுனியா 115 சம்பவங்களும் பதிவாகியுள்ளன. (உ)

# இவர்களைக் கண்டால் பொலிஸாருக்கு அறிவிக்கவும்

கம்பஹா வைத்தியசாலைக்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஹைபிரிட் காரிலிருந்து டீ 56 ரக துப்பாக்கிகள் மூன்றை நேற்றுப் பொலிஸார் மீட்டனர். இச்சம்பவத்துடன் தொடர்புடையவர்களைக் கைதுசெய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்று சந்தேகிக்கப்படும் இருவர், மேற்படி காரை பன்னிப்பிட்டியவிலிருந்து வாடகைக்கு எடுத்துச் சென்றுள்ளதாக, ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. சமிதிபுர மட்டக்குளியவைச் சேர்ந்த அசங்க சம்பத் குமார என்ற முதலாம்சந்தேக நபரினதும், உடஹமுல்ல, அமரதுங்க மாவத்தையைச் சேர்ந்த தாரக உயங்க என்ற இரண்டாம்



சந்தேக நபரினதும் புகைப்படங்களை வெளியிட்டுள்ள பொலிஸார், அவர்களைக் கைதுசெய்வதற்காக, பொதுமக்களின் உதவியை நாடியுள்ளனர். இவர்கள் தொடர்பில் தகவல் தெரிந்தவர்கள், கம்பஹா பிரதான பொலிஸ் பரிசோதகர் 0178591611, கம்பஹா பொலிஸ் நிலையம் 033-2222226 ஆகிய இலக்கங்களுக்குத் தொடர்பு கொண்டு அறியத்தருமாறும் கோரியுள்ளனர். (உ)

# அசிட் தாக்குதலில் மனைவி பலி

## காதலன் படுகாயம்

சார்ஜாவில் பணியாற்றிய தனது மனைவி மீது கணவன் அசிட் தாக்குதல் மேற்கொண்டுள்ளமையால் மனைவி உயிரிழந்துள்ளதாக மத்திய கிழக்கு ஊடகங்கள் தெரிவித்துள்ளன. இருவரும் இலங்கையைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனைவிக்கு இன்னொருவருடனுள்ள தொடர்பினால் ஆத்திரமடைந்த கணவன் அசிட் தாக்குதலை மேற்கொண்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. மனைவியின் காதலன் எனக் கூறப்படும் நபர் மீதும் அசிட் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதில் மனைவி உயிரிழந்துள்ள நிலையில், அவரது காதலன் ஆபத்தான நிலையில் உள்ளதாக அந்த நாட்டு வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை இந்தத் தாக்குதலை மேற்கொண்ட 30 வயதுடைய இலங்கையரான பிரிஷ்னி என்பவர் அங்கிருந்து இலங்கைக்குத் தப்பிச் செல்ல முயற்சித்த வேளை விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார். (உ)



# பால் விற்பனையாளர்கள் வவுனியாவில் ஆர்ப்பாட்டம்

வவுனியா கணேசபுரத்திலுள்ள பால் சபையில் பால் கொள்வனவு நிறுத்தப்பட்டுள்ளதால் இன்று, பால் உற்பத்தியாளர்கள் தமது பாலைக் கொள்வனவு செய்யுமாறு கோரிப் பால் சபைக்கு முன்பாகப் போராட்டம் ஒன்றினை மேற்கொண்டுள்ளனர்.

வவுனியா கணேசபுரம் பகுதியிலுள்ள பால் கொள்வனவு நிலையத்தில் இரண்டு நாட்களுக்கு மேலாக பாலினைக் கொள்வனவு செய்யவில்லை எனத் தெரிவித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

தொடர்ச்சியாகப் பாலினை கொள்வனவு செய்து வந்தவர்கள் திடீரெனப் பாலில் தரம் இல்லை என்ற காரணத்தை கூறி பாலினைக் கொள்வனவு செய்யாது விட்டதாக ஆர்ப்பாட்டக்காரர்கள் குறிப்பிட்டுள்ளனர். இதேவேளை சம்பவ இடத்துக்குச் சென்ற பிராந்திய பால் சபை முகாமையாளர் பாலின் தரம் குறைந்துள்ளதால் தமது நிறுவனங்களின் சட்ட திட்டங்களுக்கு ஏற்ப தற்போது பால் கொள்வனவு நிறுத்தப்பட்டுள்ளது. பாலின் தரத்தினை வைத்தே பால் கொள்வனவு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. பாலினைச் சிறியவர்கள், பெரியவர்கள் அனைவரும் பருகிவருகின்றனர். இந்த நிலையில் தரத்தின் தன்மை குறைந்து காணப்படும் பாலினை நாங்கள் கொள்வனவு செய்யவில்லை என்று தெரிவித்துள்ளார். (உ)

# புடைவை விற்ற இந்தியர்கள் இருவர் கைது



இந்தியப் பிரஜைகள் இருவர் ஊர்காவற்றுறையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஊர்காவற்றுறைப் பொலிஸ் பிரிவில் சட்டவிரோதமாகத் தங்கியிருந்து புடைவை வர்த்தகத்தில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆண் ஒருவரும், பெண்ணொருவருமே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவித்த பொலிஸார் அவ்விருவரையும் ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கு, நடவடிக்கை எடுத்து வருவதாகவும் தெரிவித்தனர். (உ)

# 2025 இல் எச்.ஐ.வி தொற்று முற்றாக ஒழிக்கப்படும்


2025ஆம் ஆண்டளவில் எச்.ஐ.வி தொற்றை நாட்டில் இருந்து முற்றாக ஒழிக்க வாய்ப்புள்ளதாகத் தேசிய பாலியல் நோய்ப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

எயிட்ஸ் தொற்றுள்ளவர்களை இனங்கண்டு அவர்களுக்குச் சிகிச்சை செய்யும் நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாக, அந்தப் பிரிவின் பணிப்பாளர் சிசிர லியனகே தெரிவித்துள்ளார்.

மேலும், எச்.ஐ.வி தொற்று அதிகமுள்ள மாவட்டமாக கொழும்பு காணப்படுவதாகவும் அவர் கூறியுள்ளார். (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தீவிரவாத எதிர்ப்புச் சட்டம்:
# பிரான்சில் அனுமதி



பிரான்சில் புதிய தீவிரவாத எதிர்ப்புச் சட்டத்துக்கு நாடாளுமன்றக் கீழவை அனுமதி வழங்கியுள்ளது. கடந்த 2015ஆம் ஆண்டு நவம்பர் 13ஆம் திகதி பாரிசில் நடந்த தீவிரவாதத் தாக்குதலில் சுமார் 130 பேர் கொல்லப்பட்டனர். இதனையடுத்து அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டது, இது தொடந்து ஆறு முறை நீட்டிக்கப்பட்டது. இந்த நிலையில் இரண்டு ஆண்டுகளாக அமுலில் இருக்கும் இந்தச் சட்டத்தை முடிவுக்குக் கொண்டு வரும் நோக்கில் புதிய தீவிரவாத எதிர்ப்புச் சட்டத்துக்கு நாடாளுமன்றக் கீழவை ஒப்புதல் அளித்துள்ளது. அவசரகால ஏற்பாடுகளின் கீழ் முன்னர் அங்கீகரிக்கப்பட்டிருந்த பல நடவடிக்கைகள் இந்தச் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. குறிப்பாக நீதித்துறையின் அனுமதியின்றிச் சுலபமாக வீடுகளில் சோதனையிடுவது மற்றும் தங்களுடைய சொந்த நகரங்களிலே தனி நபர்களை தடுப்புக்காவலில் வைப்பது ஆகியன இதில் அடங்கும். பிரான்சில் உள்ள பெரும்பான்மையான மக்கள் இதற்கு ஆதரவு தெரிவித்தாலும், மனித உரிமைக் குழுக்கள் இதனைக் கடுமையாக விமர்சித்து வருகின்றன. வருகிற நவம்பர் 1ஆம் திகதியுடன் அவசரகால நிலை முடிவுக்கு வரும் நிலையில், கீழவையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மசோதா சட்டமாக இயற்றப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (பி)

# ஜப்பானுக்கு எச்சரிக்கை



வடகொரியாவுக்கு எதிராகப் பொருளாதாரத் தடைகளை அதிகரிக்குமாறு ஜப்பான் சர்வதேச நாடுகளுக்கு அறிவுறுத்திய நிலையில் அந்த நாடு அணு ஆயுத அழிவுகளைச் சந்திக்கும் என்று வடகொரியா எச்சரித்துள்ளது. ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத்தில் பேசிய ஜப்பான் பிரதமர் அபே, வடகொரியா அதன் அணுஆயுதச் சோதனைகளை கைவிடச் சர்வதேச நாடுகள் பேச்சு வார்த்தை நடத்துவதை விட அதன் மீது பொருளாதாரத் தடைகளை அதிகரிக்க வேண்டும் என்று கூறியிருந்தார். இந்த நிலையில் ஐக்கிய நாடுகள் சபையில் ஜப்பான் பிரதமர் அபேயின் உரை குறித்து வடகொரிய ஜனாதிபதி கிம் ஜோங் வுன் கூறும்போது, ஜப்பான் பிரதமர் அபே அரசியல் நோக்கங்களுக்காக பொருளாதார நெருக்கடிகளை வடகொரியா மீது பயன்படுத்துகிறார் என்றார். மேலும் வடகொரிய மத்திய செய்தி நிறுவனம் வெளியிட்ட செய்தியில், கொரிய தீபகற்பத்தில் பதற்றத்தை ஏற்படுத்த ஜப்பான் அதன் ரொக்கெட்களை வீசி வருகிறது. ஜப்பான் அதன் மறைமுக நடவடிக்கையை நிறுத்திக் கொள்ளாவிட்டால் அணு ஆயுதத் தாக்குதலுக்கு உள்ளாகும் என்று கூறியுள்ளது. முன்னதாக வடகொரியாவுக்கு எதிராகப் பொருளாதாரத் தடைகளை விதித்துவரும் அமெரிக்கா தனக்குத் தானே அழிவை தேடிக்கொண்டிருக்கிறது என்று வடகொரியா எச்சரித்த நிலையில் ஜப்பானுக்குத் தற்போது எச்சரிக்கை விடுத்துள்ளது. (பி)

# உலகின் முதல் நிஜ ஏலியன்



உலகின் முதல் நிஜ ஏலியன் எனப் பிரேசில் பொலிசார் புகைப்படம் ஒன்றை வெளியிட்டுப் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளனர். பிரேசில் பொலிஸார் வெளியிட்ட குறித்த புகைப்படமானது ஏலியன் குறித்துப் பல ஆண்டுகளாகத் தொடர்ந்து ஆய்வு மேற்கொண்டுவரும் அமைப்பினர் தங்களின் இணையத்தளத்தில் பதிவேற்றியுள்ளனர். பிரேசிலில் வழக்கத்துக்கு மாறான நிகழ்வுகள் நடைபெற்றுவருவதாக பொலிஸாருக்குத் தகவல் கிடைத்துள்ளது. இதனையடுத்து குறித்த பகுதிக்கு விரைந்த பொலிஸார் நள்ளிரவில் குறித்த உருவத்தைத் தங்களது மொபைல் போனில் புகைப்படமெடுத்துள்ளனர். ஆனால் குறித்த புகைப்படம் புகழ்பெற்ற திரைப்படக் காட்சி போன்று இருப்பதாகவும், இது திருத்தப்பட்ட புகைப்படம் எனவும் சிலர் கருத்து வெளியிடுகின்றனர். (பி)


## மலேசியா விமானத்தைக் கண்டுபிடிக்கும் முயற்சி
# முடிவு

காணாமல் போன மலேசியா விமானத்தைக் கண்டுபிடிக்கும் தங்களின் முயற்சி முடிவுக்கு வந்து விட்டதாக ஆஸ்திரேலியப் போக்குவரத்துப் பாதுகாப்பு பணியகம் சார்பில் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. மலேசியாவின் MH370 ரக விமானம் கடந்த 2014இல் கோலாலம்பூரிலிருந்து பெய்ஜிங் நகருக்கு 239 பயணிகளை ஏற்றிக்கொண்டு சென்ற நிலையில் திடீரெனக் காணாமல் போனது.

இதையடுத்து ஆஸ்திரேலியா, மலேசியா, சீனா உள்ளிட்ட நாடுகள் காணாமல் போன விமானத்தைத் தேடும் பணியில் ஈடுபட்டிருந்த நிலையில் மலேசியா மற்றும் சீனா கடந்த ஜனவரி மாதம் தேடுதல் வேட்டையை நிறுத்தின. ஆனால், தேடுதல் வேட்டையை மீண்டும் தொடருவோம் என மலேசியா கூறிய நிலையில், தற்போது ஆஸ்திரேலியா தேடுதல் பணியை நிறுத்திவிட்டதாக அறிவித்துள்ளது. இதில் ஈடுபட்டிருந்த ஆஸ்திரேலிய போக்குவரத்துப் பாதுகாப்புப் பணியகம் இது குறித்த அறிக்கையை வெளியிட்டுள்ளது. அதில், எங்களால் விமானத்தைக் கண்டு பிடிக்க முடியவில்லை. விமானம் கிடைத்தால் மட்டுமே அது காணாமல் போனதற்கான காரணத்தை அறியமுடியும். 10 மில்லியன் பயணிகள் ஒவ்வொரு நாளும் விமானங்களில் பயணிக்கும் நிலையில், விமானம் குறித்த உறுதியான தகவல் எங்களுக்கு தெரியவில்லை.

MH370 இல் பயணித்தவர்களின் குடும்பங்களுக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, விமானத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லை என்று வருத்தத்தோடு கூறிக்கொள்கிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பி)

### கண்ணீர் மற்றும் உமிழ்நீரில்
# மின்சாரம்



அயர்லாந்தில் உள்ள லிமேறிக் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் கண்ணீர் மற்றும் உமிழ்நீரிலிருந்து மின்சாரத்தினை உற்பத்தி செய்யும் வழிமுறையினைக் கண்டறிந்துள்ளனர். இந்த மின்சார உற்பத்திக்கு லைசோசைமி எனும் புரதமே உதவியாக இருக்கின்றது என அவர்கள் தெரிவித்துள்ளனர். இந்தப் புரதமானது கண்ணீர், உமிழ்நீர், பால், சளி மற்றும் முட்டை என்பவற்றில் காணப்படுகின்றது. இது பக்டீரியாக்களின் கலச்சுவரினை தகர்க்கும் தன்மை வாய்ந்ததாகவும் இருக்கின்றது. லைசோசைமி புரதப் பளிங்கிற்கு அமுக்கம் ஒன்றினை வழங்குவதன் ஊடாக மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியும் என அவர்கள் கண்டறிந்துள்ளனர். இவ்வாறு சக்தி பெறப்படுவதினை" பிசியோ எலக்ரிசிற்றி" என அழைக்கின்றனர்.

# தமிழகத்தைத் தாக்கவிருக்கும் இரு புயல்கள்

இந்தியத் துணைக் கண்டமானது தென்மேற்குப் பருவ மழை, வடகிழக்குப் பருவமழை என இரு பருவ காலங்களில் நல்ல மழையைத் தரும். இந்த ஆண்டு தென்மேற்குப் பருவமழையால் நாடு முழுவதும் நல்ல மழை பெய்துள்ளது. தமிழ்நாட்டில் மேற்குத் தொடர்ச்சி மலையை ஒட்டியுள்ள மாவட்டங்களில் மட்டுமே தென் மேற்குப் பருவ மழை பெய்யும். ஆனால் தற்போது தமிழகம் முழுவதும் வழமையை விட அதிக அளவு மழை பெய்து வருகிறது. வடகிழக்குப் பருவ மழை தொடர்பாக தனியார் வானிலை அமைப்புகள் பல்வேறு தகவல்களை சமூக வலை தளங்களில் வெளியிட்டுப் பரபரப்பை ஏற்படுத்தி வருகின்றன. இதற்கிடையே டெல்லியில் உள்ள இந்திய வானிலை ஆய்வு மையம் வடகிழக்கு பருவ மழை தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில் தமிழகத்தை குறிப்பாகச் சென்னையை 2 புயல்கள் தாக்கும் என்று தெரிவித்துள்ளது. (பி)



# மல்லையா மீண்டும் விடுதலை



பண மோசடி வழக்கில் லண்டனில் கைது செய்யப்பட்ட விஜய் மல்லையா கைதான உடனேயே பிணையில் விடுவிக்கப்பட்டார்.

பிரபல தொழிலதிபரான விஜய் மல்லையா இந்திய வங்கிகள் பலவற்றிலும் 9 ஆயிரம் கோடி ரூபாய்க்கும் மேலாகக் கடன் வாங்கிவிட்டுத் திருப்பிச் செலுத்தாமல் லண்டனுக்குத் தப்பி சென்றுவிட்டார். கடந்த 2016ஆம் ஆண்டு மார்ச் முதல் லண்டனில் தலைமறைவாக இருக்கும் அவரை இந்திய அரசு நாடு கடத்த முயன்று வருகிறது. இதன்படி கடந்த ஏப்ரல் மாதம் எடுக்கப்பட்ட முயற்சியின்போது கைதான விஜய் மல்லையா உடனடியாக விடுவிக்கப்பட்டார்.

இந்த நிலையில், நேற்று மீண்டும் லண்டனில் விஜய் மல்லையா கைது செய்யப்பட்டார். ஆனால் கைதான சில நிமிடங்களிலேயே அவர் பிணையில் விடுதலை செய்யப்பட்டார். பின்னர் அவர் கூறுகையில்" நான் எந்த நீதிமன்றத்தையும் ஏமாற்றவில்லை, என் தரப்பு வாதங்களை எடுத்துரைக்க எனக்கு போதுமான ஆதாரங்கள் இருக்கின்றன. நான் எந்தக் குற்றமும் புரியவில்லை" எனக் கூறியுள்ளார். (பி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கமலை எதிர்க்க ரஜினி தயக்கம்!



கமல்ஹாசனுக்குப் போட்டியாக அரசியலில் ஈடுபட ரஜினிகாந்த் தயங்குகிறார் எனவும், ரசிகர்களைச் சந்திக்கும்போது இறுதி முடிவை அறிவிப்பார் என்றும் பரபரப்புத் தகவல் வெளியாகி உள்ளது.

தமிழக அரசியல் பரப்பில் தற்போதைய எதிர்பார்ப்பு ரஜினிகாந்த் - கமல்ஹாசனின் அரசியல் பிரவேசமே.

ஜெயலலிதா மறைவினால் வெற்றிடமாக உள்ள அரசியலை ரஜினிகாந்த் நிரப்புவார் என்று அவரது ஆதரவாளர்கள் நம்புகிறார்கள். ரஜினிக்கு அ.தி.மு.க.வுக்கு எதிராகக் குரல் கொடுத்து தி.மு.க.வை ஆட்சிக்குக் கொண்டு வந்த அனுபவம் இருக்கிறது.

நாட்டில் அமைப்பு (சிஸ்ரம்) கெட்டுக் கிடக்கிறது. ரசிகர்கள் போருக்குத் தயாராக இருங்கள் என்று அரசியல் கருத்துத் தெரிவித்தார் அவர். பின்னர் அரசியல் பிரவேசம் குறித்து உத்தியோக பூர்வமாக அறிவிப்பார் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், கமல்ஹாசன் அரசியலுக்கு வரப்போவதாக அறிவித்துத் திருப்பத்தை ஏற்படுத்தினார். ரஜினிகாந்துக்கு முன்பாக அரசியலுக்கு வந்துவிடும் வேகம் அவரிடம் இருக்கிறது.

இதனாலேயே ரஜினிகாந்த் அரசியலுக்கு வரத் தயங்கி, சிவாஜி கணேசனின் தோல்வியை உதாரணப்படுத்தினார் எனக் கூறப்படுகிறது. ஆனாலும் ரஜினிகாந்த் அரசியலுக்கு வருவது உறுதி என்று அவரது ரசிகர்கள் நம்புகிறார்கள். தனது முடிவை அடுத்த ரசிகர்கள் சந்திப்பில் வெளிப்படையாக அறிவித்து விடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.(ஓ)



# கபாலி, பாகுபலி வரிசையில் மெர்சல்

'கபாலி', 'பாகுபலி-2' வரிசையில் 'மெர்சல்' படத்துக்கும் புதிய அந்தஸ்துக் கிடைக்கவிருக்கிறது.

அட்லி இயக்கத்தில் விஜய், சமந்தா, காஜல் அகர்வால், நித்யா மேனன் இணைந்து நடித்து வரும் படம் 'மெர்சல்'. இந்தப் படம் தீபாவளிக்கு வெளியாகவுள்ளது.

படத்தை விளம்பரப்படுத்தத் தயாரிப்பு நிறுவனம் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வரும் நிலையில், படத்தின் வியாபாரமும் சூடுபிடித்துள்ளது.

இந்த நிலையில், 'மெர்சல்' படத்துக்கு புதிய அந்தஸ்து ஒன்றும் கிடைக்கவிருக்கிறது. அது என்னவென்றால், ஐரோப்பாவின் மிகப்பெரிய திரையரங்கான 'பரிஸின் ஹலீ கிராண்ட் ரெக்ஸ்' திரையரங்கில் மெர்சல் படம் திரையிடப்படவுள்ளது என அந்த நிறுவனத்தின் அதிகார பூர்வ ருவிட்டர் பக்கத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது.

சுமார் 2200 பேர் அமர்ந்து பார்க்கக் கூடிய பிரம்மாண்டமான திரையரங்கம் அது என்பது குறிப்பிடத்தக்கது. இந்தத் திரையரங்கில் திரையிடப்பட்ட முதல் இந்தியப் படமாகக் 'கபாலி' இடம் பெற்றிருந்தது. அதனைத் தொடர்ந்து 'பாகுபலி-2' படம் திரையிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஓ)



# 37 அதிகரித்தும் 4இல் மாற்றமில்லை!

பாகிஸ்தானுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் சிறப்பாக விளையாடிய இலங்கை அணியின் சுழல்பந்து வீச்சாளரான ஹேரத்துக்கு, தரவரிசைப் பட்டியலில் புள்ளிகள் அதிகரித்தபோதும், வரிசையில் மாற்றம் கிடைக்கவில்லை.

சர்வதேச கிரிக்கெட் சபையின் (ஐ.சி.சி.), டெஸ்ட் கிரிக்கெட் வீரர்களின் புதிய தரவரிசைப் பட்டியல் நேற்று வெளியிடப்பட்டுள்ளது.

இதில் துடுப்பாட்ட வீரர்களின் முதல் 6 இடங்களில் மாற்றம் இல்லை. ஆஸ்திரேலிய அணித்தலைவர் ஸ்ரீபன் ஸமித் (936 புள்ளிகள்) முதலிடத்திலும், இங்கிலாந்து அணித்தலைவர் ஜோ ரூட் 2ஆவது இடத்திலும் (889), நியூசிலாந்து அணித்தலைவர் வில்லியம்ஸன் 3ஆவது இடத்திலும், இந்திய வீரர் புஜாரா 4ஆவது இடத்திலும், ஆஸ்திரேலிய துணைத்தலைவர் டேவிட் வோர்னர் 5ஆவது இடத்திலும், இந்திய அணித்தலைவர் விராட் கோலி 6ஆவது இடத்திலும் நீடிக்கிறார்கள்.

பங்களாதேஷுக்கு எதிரான டெஸ்டில் சதம் அடித்த தென்னாபிரிக்க வீரர் அம்லா ஓர் இடம் முன்னேறி 7ஆவது இடத்தைப் பிடித்துள்ளார். இந்திய வீரர்கள் லோகேஷ் ராகுல் 9ஆவது இடத்திலும், ரஹானே 10ஆவது இடத்திலும் மாற்றமின்றித் தொடர்கிறார்கள்.

பந்து வீச்சாளர்களின் தரவரிசையில் இங்கிலாந்து வேகப் பந்து வீச்சாளர் ஜேம்ஸ் அண்டர்சன் (896 புள்ளிகள்) முதலிடத்தையும், இந்திய சுழற்பந்து வீச்சாளர்கள் ரவீந்திர ஜடேஜா (884) 2ஆவது இடத்தையும், அஸ்வின் (852) 3ஆவது இடத்தையும் பிடித்துள்ளார்கள்.

அபுதாபியில் நடந்த பாகிஸ்தானுக்கு எதிரான முதலாவது டெஸ்டில் 11 விக்கெட்டுகளை வீழ்த்தி மகத்தான வெற்றியைத் தேடிக்கொடுத்த இலங்கை சுழற்பந்து வீச்சாளர் ஹேரத்துக்கு மேலும் 37 புள்ளிகள் கிடைத்துள்ளபோதிலும் தரவரிசையில் மாற்றம் இல்லை. அவர் (846) 4ஆவது இடத்தில் தொடர்கிறார். (ஐ)

# கில்லறியைச் சாய்த்தது யங்ஹென்றிஸ் றோயலைப் பந்தாடியது டயமன்ஸ்





மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகம் நடத்திவரும் அழைக்கப்பட்ட கழகங்களுக்கிடையிலான "வடமாகாண மகுடம்" உதைபந்தாட்டத் தொடரின் நேற்றைய ஆட்டங்களில் இளவாலை யங்ஹென்றிஸ் மற்றும் வதிரி டயமன்ஸ் கழகங்கள் வெற்றி பெற்றுள்ளன.


அணிக்கு 7 பேர் கொண்டதாக நடத்தப்படும் இத்தொடரில், பரபரப்பான இரு ஆட்டங்கள் நேற்று இரவு நடைபெற்றன.

முதலில் நடைபெற்ற போட்டியில், இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மன்னார் கில்லறி விளையாட்டுக் கழகம் மோதியது.

பரபரபாக ஆரம்பமாகிய இப்போட்டியில், இளவாலை யங் ஹென்றிஸ் விளையாட்டுக் கழகம், முன்கள வீரர்களின் சிறப்பாக ஆட்டம் கைகொடுக்க 2:0 என்ற கோல் கணக்கில் மன்னார் கில்லறியை வீழ்த்தியது.

மற்றொரு போட்டியில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகம் மோதியது.

இந்த ஆட்டத்தைத் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்த டயமன்ஸ், 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ஐ)



# அவதாரில் டைட்டானிக் நாயகி

ஜேம்ஸ் கமரூன் இயக்கத்தில் உருவாகும் 'அவதார்' படத்தின் அடுத்த பாகங்களில் நடிக்க 'டைட்டானிக்' படத்தில் ரோஸ் என்ற கதாபாத்திரத்தில் நடித்து ரசிகர்களைக் கவர்ந்த கேட் வின்ஸ்லெட் ஒப்பந்தமாகி இருக்கிறார்.

2009ஆம் ஆண்டு வெளியாகி பிரமாண்ட வசூலைக் குவித்த 'அவதார்' படத்தின் அடுத்தடுத்த பாகங்களை இயக்குவதற்கான பணிகளில் இயக்குநர் ஜேம்ஸ் கமரூன் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார்.

2020ஆம் ஆண்டு டிசெம்பரில் 'அவதார்' படத்தின் அடுத்த பாகமாக 'அவதார்-2' வெளியாகவுள்ளது. அதனைத் தொடர்ந்து 'அவதார்' படத்தின் அடுத்தடுத்த பாகங்கள் வெளியாகும் என்றும் அறிவிக்கப்பட்டது.

இந்த நிலையில், 'டைட்டானிக்' படத்தின் மூலம் உலக ரசிகர்களின் உள்ளத்தைக் கவர்ந்த 'டைட்டானிக்' ரோஸ் எனப்படும் கேட் வின்ஸ்லெட் 'அவதார்' படத்தின் அடுத்தடுத்த பாகங்களில் நடிக்க ஒப்பந்தமாகி இருக்கிறார்.

20 வருடங்களுக்குப் பிறகு ஜேம்ஸ் கமரூன் இயக்கத்தில் கேட் வின்ஸ்லெட் நடிக்கவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஓ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெற்காசிய புரிந்துணர்வு சங்கத்தின் 8ஆவது மாநாடு ஆரம்பம்

தெற்காசியப் பிராந்திய புரிந்துணர்வு சங்கத்தின் சபாநாயகர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் 8ஆவது மாநாடு இன்று கொழும்பில் ஆரம்பமாகியுள்ளது. கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் இது தொடர்பான ஆரம்ப வைபவம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சபாநாயகர் கரு ஜயசூரிய ஆகியோரின் பங்களிப்புடன் இன்று காலை 9.30 க்கு ஆரம்பமாகியது. மாநாடு எதிர்வரும் 6ஆம் திகதி வரையில் சார்க் நாடுகளின் அரச தலைவர்கள் சபாநாயகர்கள் ஆகியோரின் பங்களிப்புடன் நடைபெறும். இந்தியா, பாகிஸ்தான் ,பங்களாதேஷ், இலங்கை ,பூட்டான் ,நேபாளம், மாலைதீவு, ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளை பிரதிநிதித்துவப்படுத்தி சபாநாயகர்கள், வெளிநாட்டு பிரதிநிதிகள் இதில் கலந்துகொள்கின்றனர். வறுமையிலிருந்து மீண்டும் தமது சமூகத்துக்காக சிறந்த எதிர்காலத்தைக் கட்டியெழுப்புவதற்கு பெண்கள் பங்களிப்புச் செய்வோம் என்ற தொனிப் பொருளின் கீழ் மகளிர் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டமொன்றும் நடைபெறவுள்ளது. (உ)

# உயர்தரப் பரீட்சையின் செய்முறைப் பரீட்சை

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையின் 11 பாடங்களுக்குரிய செயன்முறைப் பரீட்சை இந்த மாதம் 8ஆம் திகதிஆரம்பமாகும் என பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது. நாடு பூராகவும் அமைந்துள்ள 398 மத்திய நிலையங்களில் 56 ஆயிரத்து 439 பரீட்சார்த்திகள் இந்தச் செயன்முறை பரீட்சைக்குத் தோற்ற உள்ளனர். பொறியியல் தொழில்நுட்ப பாடத்துக்கான செயன்முறைப்பரீட்சை எதிர்வரும் 8ஆம் திகதி முதல் 15ஆம் திகதி வரை நடைபெறும். உயிரியல் தொழில்நுட்ப பாடத்துக்கான செயன்முறைப் பரீட்சை எதிர்வரும் 20ஆம்திகதி முதல்22ஆம்திகதி வரை நடைபெறவுள்ளது. அழகியல் மற்றும் மனைப் பொருளியல் பாடங்களுக்கான செயன்முறை பரீட்சை எதிர்வரும் 20ஆம் திகதி முதல் 31ஆம் திகதி வரை நடைபெறுமென பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.(உ)

# இன்றைய கருத்தோவியம்




# ஆயுதங்களுடன் இருவர் கைது!



சட்ட விரோத மது விற்பனை தொடர்பாகக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலையடுத்து, சுற்றி வளைப்புச் செய்து தேடுதல் நடத்தியபோது கைத்துப்பாக்கி, தோட்டக்கள் மற்றும் வாள் ஒன்றுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனரென, கல்முனைப் பொலிஸார் தெரிவித்தனர். கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலையடுத்தே, நேற்று மாலை விசேட அதிரடிப்படையினர் சட்ட விரோதமாக மதுபானம் விற்பனை செய்வதாகக் கூறப்படும் வீட்டைச் சுற்றிவளைப்புச் செய்து தேடுதல் நடத்தினர். ஆனால், சட்டவிரோத மதுவுக்குப் பதிலாக ஒரு கைத்துப்பாக்கியும், 8 தோட்டாக்களும் ஒரு வாளுமே அந்த வீட்டிலிருந்து மீட்கப்பட்டதோடு, சம்பவத்துடன் தொடர்புடைய 62 மற்றும் 38 வயதுடைய இரு சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்டவர்கள் மேலதிக விசாரணைக்காக கல்முனை தலைமையக பொலிஸில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம்பற்றி கல்முனைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர். (உ)

## பியூச்சர் இமேச் – 2017
# கண்காட்சி கொழும்பில்

பியூச்சர் இமேச் - 2017 கண்காட்சி கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. நாளை மறுதினம் ஆரம்பமாகும் இந்தக் கண்காட்சி இரண்டு நாட்களைக்கொண்டதாக ஒக்ரோபர் 8ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது. இந்தக் கண்காட்சியில்சர்வதேசப்புகைப்படம், ஒலிப்படம், சினிமா ஒளிப் பதிவு உள்ளடங்கிய துறைகளில் பல்வேறு புதிய அம்சங்கள் காட்சிபடுத்தப்படவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (உ)

# பதுளையில் அனர்த்த ஒத்திகை

பதுளை மாவட்டத்தில், 14 பிரதேச செயலாளர் பிரிவுகளில், அனர்த்த முகாமைத்துவ ஒத்திகை, இன்று இடம்பெறவுள்ளது. இன்று மாலை 67 கிராம சேகவர் பிரிவுகளிலும் இந்த ஒத்திகை இடம்பெறுகிறது. இந்த ஒத்திகை தொடர்பில், அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவிக்கையில், மீகஹகிவுல, கந்தகெட்டிய, சொரணாதொட, லுணுகல, வெலிமட, எல்ல, மஹியங்கனை, பதுளை, பசறை, ஹாலிஎல, பண்டாரவளை, ஊவா பரணகம, ஹப்புத்தளை மற்றும் ஹல்துமுல்லை ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளிலேயே, இந்த ஒத்திகை நடத்தப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். இந்த ஒத்திகைகள், மண்சரிவு மற்றும் வெள்ள அனர்த்தம் தொடர்புடையதாக இருக்கும்என்பதுடன், முழுமையான அறிவித்தல் விடுக்கப்பட்டதன் பின்னர், மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பி வைக்கப்படுவர் என்றும் அவர் குறிப்பிட்டார். (உ)

## கோட்டை ரயில் நிலையத்துக்கு
# இன்று 100 வயது



கொழும்பு கோட்டை ரயில் நிலையம் ஆரம்பிக்கப்பட்டு இன்றுடன் 100 வருடங்கள் நிறைவுபெறுகின்றது. 1917ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 4ஆம் திகதி திறக்கப்பட்ட கொழும்புக் கோட்டை ரயில் நிலையம் பாரிய அளவில் இரும்புகள் பயன்படுத்தப்பட்டு அக் காலப்பகுதியில்1 கோடி ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ளது. கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தின் 100 ஆண்டு நிறைவை முன்னிட்டு விசேட நிகழ்ச்சிகளை ரயில்வே திணைக்களம் நடத்துகின்றது. (உ)

# குறைந்த விலையில் அரிசி சதொச ஊடாக விற்பனை



சதொச ஊடாக குறைந்த விலையில் அரிசியை மொத்தமாக விநியோகிக்கும் நடவடிக்கை இன்று ஆரம்பமாகின்றது. சதொசவுக்கு உட்பட்ட நாடு முழுவதிலுமுள்ள மாவட்டங்களில் உள்ள 28 மத்திய நிலையங்களில் அரிசி இவ்வாறு மொத்தமாக விநியோகிக்கப்படும் என்று சதொசவின் தலைவர் டி .ரி. எம். கே. பி. தென்னக்கோன் தெரிவித்தார். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆலோசனைக்கமைவாகப் புறக்கோட்டை மொத்த அரிசி, சந்தை விலையிலும் பார்க்க குறைவாக இந்த அரிசி விநியோகிக்கப்படும் என்று சதொச தலைவர் தெரிவித்தார். (உ)

## புலமைப்பரிசில் பெறுபேறு நாளை வெளியாகிறது

தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையின் பெறுபேறுகள் நாளை வெளியிடப்படும் என்று பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது. திணைக்களத்தின் www.doenets.lk என்ற இணையத்தளத்தில் பெறுபேறுகளைப் பார்வையிட முடியும். கடந்த ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற புலமைப் பரிசில் பரீட்சைக்கு 3 இலட்சத்து 50 ஆயிரத்து 728 மாணவர்கள் தோற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.(உ)

# மூன்று வீடுகள் மீது அம்பாறையில் தாக்குதல்

அம்பாறை பொலிஸ் பிரிவிலுள்ள மூன்று வீடுகள் மீது, இன்று அதிகாலை தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதன்படி, எட்டுப் பேர் அடங்கிய குழுவினரே இந்தத் தாக்குதலை மேற்கொண்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது. இந்தத் தாக்குதலில் 83 வயதான பெண் ஒருவர் காயமடைந்த நிலையில் அம்பாறை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். தாக்குதலை மேற்கொண்டவர்கள் கிராம வாசிகள் என அந்தப் பகுதி மக்கள் குறிப்பிட்டுள்ளனர். இந்தத் தாக்குதல் காரணமாக மூன்று வீடுகள் சேதமடைந்துள்ளதோடு, பொலிஸார் குறித்த பகுதிகளுக்குப் பாதுகாப்பு அளித்துள்ளதாகத் தெரியவந்துள்ளது. (உ)

## நாளை நாளும் கோளும்

05.10.2017 வியாழக்கிழமை ஏவிளம்பி வருடம் புரட்டாதி மாதம் 19 ஆம் நாள்

பூரணை பி.இ. 12.39 வரை | உத்தரட்டாதி மு.இ. 09.56 வரை | சித்தயோகம் | பூரணை விரதம்

இராகுகாலம் 01.32 - 03.02 | சுபநேரம் 07.32 - 09.02 | எமகண்டம் 06.02 - 07.32


| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| இலாபம் | உதவி | ஆர்வம் | நன்மை | வெற்றி | செலவு | வரவு | நலம் | நட்பு | பரிசு | பாசம் | சாந்தம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரொலி
Ethiroli

புதன், 04 ஒக்ரோபர் 2017

## அந்த நாள் ஞாபகம்.....!




**1957.10.04**

முதலாவது செயற்கைச் செய்மதி ஸ்புட்னிக் 1 பூமியைச் சுற்றி வர விண்ணுக்கு அனுப்பப்பட்டது.

## வெளிநாட்டவருக்கு காணிகளை வழங்குவதற்கு எதிர்ப்பு

நாட்டில் மக்களுக்குச் சொந்தமான காணிகளை வெளிநாட்டு நிறுவனங்களுக்கு வழங்குவதற்கு எதிர்ப்புத் தெரிவித்துப் பாரிய போராட்டத்தை மேற்கொள்ளவுள்ளதாக, பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார். ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் மட்டும் ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலங்களை வெளிநாட்டு நிறுவனங்களுக்கு வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (உ)



## நவீன வசதிகளுடன் சிறைச்சாலை திறப்பு

அங்குனுகொளபெலஸ்ஸவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள அதிநவீன வசதிகளைக் கொண்ட சிறைச்சாலை எதிர்வரும் 16ஆம் திகதி திறக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலை மறுசீரமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. நீதி அமைச்சர் தலதா அத்துகோரலவின் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது. 40 ஏக்கருக்கும் அதிகமான நிலப்பரப்பில் அமைக்கப்பட்டுள்ள நவீன வசதிகளைக் கொண்ட அங்குனுகொளபெலஸ்ஸ சிறைச்சாலையில் 1200 கைதிகள் தடுத்து வைக்க முடியும் என தெரிவிக்கப்படுகின்றது. மேலும் 500 சிறைச்சாலை ஊழியர்களுக்கான வசதிகள் அங்கு காணப்படுவதாகக் குறிப்பிடப்படுகின்றது. அங்குனுகொளபெலஸ்ஸ சிறைச்சாலையில் நீச்சல் தடாகம் உட்பட பல நவீன வசதிகள் உள்ளடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ)

## எதிர்க்கட்சித் தலைவர் மட்டக்களப்பு விஜயம்

எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் நாளை மறுதினம் மட்டக்களப்புக்கான விசேட விஜயம் ஒன்றினை மேற்கொள்ளவுள்ளார். அங்கு அரசியல் நிகழ்வுகளில் பங்கேற்கும் அவர் சனிக்கிழமை சுவாமி விபுலாநந்தர் மாநாட்டில் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

## ஜனநாயகம் மீறப்படும் இடமாக நாடாளுமன்றம் மாறியுள்ளது

ஜனநாயகம் மீறப்படும் இடமாக நாடாளுமன்றம் மாறியுள்ளது என ஜே.வி.பி கட்சி தெரிவித்துள்ளது. ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் மையமாக நாடாளுமன்றம் காணப்பட வேண்டிய போதிலும், நாடாளுமன்றில் ஜனநாயகம் மீறப்படுகின்றது என ஜே.வி.பியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். நாடாளுமன்றின் சுவர்களுக்கு வாய் இருந்தால் தாம் சொல்வது உண்மை என்பதனை அவை நிரூபிக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார். கடந்த எழுபது ஆண்டுகளில் நாடாளுமன்றின் பெயருக்குக் களங்கம் ஏற்படுத்தக் கூடிய பல்வேறு செயற்பாடுகள் இடம்பெற்றுள்ளதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார். ஜனநாயகத்தை பாதுகாக்கும் வகையிலான செயற்பாடுகளே முன்னெடுக்கப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். (உ)

## 100 பேருக்கு யாழில் இலவசமாக பிளாஸ்ரிக் சேர்ஜரி

100 வடக்கு மாகாணத்தில் போரின் காரணமாக ஏற்பட்ட காயங்களின் அடையாளங்களைப் போக்கும் வகையிலான பிளாஸ்ரிக் சேர்ஜரி சிகிச்சை, நவம்பர் மாதத்தில் 100 பேருக்கு மேற்கொள்ளப்படவுள்ளது என்று மருத்துவர் அமுதா கோபாலன் தெரிவித்தார். கொட்டாஞ்சேனை 306 B1 இலக்க மாவட்ட லயன்ஸ் கிளப் ஏற்பாட்டில் குறித்த சத்திர சிகிச்சைகள் இடம்பெறவுள்ளன. இது குறித்து மருத்துவர் அமுதா கோபாலன் மேலும் விபரம் தெரிவிக்கையில், " வடக்கு மாகாணத்தில் போரின் காரணமாகவும், விபத்துக்கள், தீக்காயங்கள் காரணமாகவும் ஏற்பட்ட காயங்களின் அடையாளங்களைப் போக்கும் வகையில் பிளாஸ்ரிக் சேர்ஜரி சத்திர சிகிச்சையைக் கடந்த வருடம் யாழ்ப்பாணத்தில் மேற்கொண்டிருந்தோம். அப்போது 40 பேருக்கு இந்த மாற்று சிகிச்சை இடம்பெற்றது. அவ்வாறு மேற்கொண்ட சிகிச்சையில் பயன்பெற்றோர் தற்போது அதன் நன்மையை அனுபவித்து வருகின்றனர். இதன் அடிப்படையில் இந்த ஆண்டு நவம்பர் மாதம் 12 ஆம் திகதி முதல் 6 தினங்கள் குறித்த சிகிச்சை தெல்லிப்பழை வைத்தியசாலையில் இடம்பெறவுள்ளது. இதன் போது சுமார் 100 பேருக்கு இந்தச் சிகிச்சை மேற்கொள்ள ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்காக அமெரிக்காவில் இருந்து 6 வைத்திய நிபுணர்களும் 18 உதவியாளர்களுமாக 24 பேர் கொண்ட அணி இங்கு வருகை தரவுள்ளது. எனவே இவ்வாறான பிளாஸ்ரிக் சிகிச்சை தேவைப்படுபவர்கள் தெல்லிப்பழை வைத்தியசாலையுடன் தொடர்புகொண்டு தமது பதிவுகளைமேற்கொள்வதன் மூலம் இந்தச் சேவையினை இலவசமாக பெற்றுக் கொள்ள முடியும்" என்றார்.(ஆ)

## யாழில் சட்ட உதவி அலுவலகம்

ஆரோக்கியமான வேலைச்சூழல் மற்றும் பால்நிலை சமத்துவத்தை மேம்படுத்தல் என்ற சட்ட உதவி அலுவலகம் ஒன்று யாழ்ப்பாணத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் தொழிலாளர் உரிமை பணியிடங்களில் இடம்பெறும் பெண்களுக்கெதிரான வன்முறைகள் தொடர்பில் முறைப்பாடுகள் செய்ய முடியும் என்று தெரிவிக்கப்பட்டது. முறைப்பாடுகளை இலக்கம் 33, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் உள்ள அலுவலகத்திலோ அல்லது 021 221 4444 என்ற தொலைபேசி இலக்கத்தின் வாயிலாகவோ முன்வைக்க முடியும். யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் என். வேதநாயகன் மற்றும் சொலிடாரிதி நிறுவன வதிவிட பணிப்பாளர் அலன்சோசசோன் ஆகியோரின் பங்களிப்புடன் இந்த அலுவலகம் திறக்கப்பட்டுள்ளது. (உ)

## சாதனையை இழக்கும் இலங்கையின் நீர்வீழ்ச்சி



இலங்கையின் உயரமான நீர்வீழ்ச்சி எனப் பெயரிடப்பட்ட பம்பரகந்த நீர்வீழ்ச்சி வற்றிப் போகும் அபாயத்தை எட்டியுள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ளது. 863 மீற்றர் அடி உயரமான இந்த நீர்வீழ்ச்சி முழுமையாக வற்றிப் போனால் இலங்கையின் உயரமான நீர்வீழ்ச்சி என்ற சாதனை இல்லாமல் போகும் நிலை ஏற்படும் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதன் காரணமாக இலங்கையின் சுற்றுலாத்துறை மிகவும் பாதிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. நீர்வீழ்ச்சியை சென்றடைவதற்கு சிறப்பான வீதி கட்டமைப்புகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது. எனினும் இந்த நீர் வீழ்ச்சியைப் பாதுகாப்பதற்கு இதுவரை எந்தவொரு அதிகாரியோ அல்லது சுற்றுச் சூழல் அமைப்புகளோ தலையிடவில்லை என குற்றம் சாட்டப்பட்டுள்ளது. பம்பரகந்த நீர் வீழ்ச்சி செல்லும் நீரை இடை நடுவில் சட்ட விரோதமாக பெற்றுக் கொள்ளும் நடவடிக்கை முன்னெடுக்கப்படுகிறது. இதன் காரணமாக நீர்வீழ்ச்சிக்கு செல்லும் அளவு குறைவடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (உ)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**கஞ்சாவுடன்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்டுள்ளனர். சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் 24, 26, 27, 39 வயதானவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. மன்னார் பகுதியிலிருந்து சூடுவந்தபுலவு நோக்கி பயணித்த நபர்களிடம் கேரளா கஞ்சா இருப்பதாக பொலிஸாருக்கு இரகசியத் தகவல் கிடைத்துள்ளது. இதனையடுத்து நெளுக்குளம் பொலிஸ் பொறுப்பதிகாரி எ.எம்.எஸ்.அத்தநாயக்க தலைமையிலான குழுவொன்று மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போதே சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த நிலையில் சந்தேகநபர்களிடம் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாவும், மேலதிக விசாரணைகளின் பின்னர் வவுனியா பொலிஸ் நிலையத்தினுடாக வவுனியா மாவட்ட நீதவான் நீதிமன்றில் ஒப்படைக்கவுள்ளதாகவும் நெளுக்குளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (உ)

**அரசியல்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தக் கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர். அனுராதபுரம் சிறையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகள் தமது வழக்கு நடவடிக்கைகளை தமிழ் நீதிமன்றங்களுக்கு மாற்றுமாறு கோரியும் தமது வழக்கு விசாரணைகளை விரைவுபடுத்தக் கோரியும் கடந்த 10 நாட்களாக உணவு தவிர்ப்பில் ஈடுபட்டுள்ளனர்.

அவர்களின் உயிரை மதித்து மக்கள் பிரதிநிதிகள், அரசியல் தலைவர்கள் உடனடியாகத் தீர்வை பெற்றுக்கொடுக்க வேண்டும் எனக் கோரியும் ஏனைய அரசியல் கைதிகள் விடயத்தில் உரிய தீர்வை சம்பந்தப்பட்ட தரப்பினர் விரைவாக நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் எனக் கோரி இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகத்தின் நான்கு பீடங்களையும் சேர்ந்த ஆயிரத்துக்கும் அதிகமான மாணவர்கள் திரண்டு போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர். மாணவர்களுடன் இணைந்து ஆசிரிய சங்கம்,கல்வி சாரா ஊழியர் சங்கம் என்பவையும் போராட்டத்தில் ஈடுபட்டன. (எ)

**அதிருப்தி...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதுபற்றி, மக்கள் கரிசனை கொண்டுள்ளனர் எனவும் குறிப்பிட்டார். அத்தோடு, தனது விஜயத்தின் போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள், உட்கட்சி மோதல் காணப்படுவதை உணர்ந்தாரெனவும் குறிப்பிட்டார். "எங்களது காலத்தில், அபிவிருத்திப் பணிகளை, மிகப் பெரிய அளவில் மேற்கொண்டோர். இப்போது, கிட்டத்தட்ட எதுவுமே செய்வதில்லை" என்று அவர் குறிப்பிட்டார். (எ)

**அகதிகள்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார் என்பதுடன், அவருக்கு எதிராகப் பாணந்துறை நீதவான் நீதிமன்றத்தில் மூன்று வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. அதில், ஒரு வழக்கு, முஸ்லிம் பள்ளிகள் மீது தாக்குதல்களை மேற்கொண்டு, சேதங்களை விளைவித்த சம்பவங்களுடன் தொடர்புடையதாகும். மற்றைய வழக்கு, பாணந்துறை மகளிர் வித்தியாலயத்தின் பெண் அதிபரை அச்சுறுத்திய சம்பவத்துடன் தொடர்புடையதாகும் என்றும் தலைமையகம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பட்ட சந்தேகநபர்கள் இருவரும். தப்பியோடி தலைமறைவாகியுள்ளனர் என்றும், அவ்விருவர் தொடர்பிலான, தகவல் கிடைக்குமாயின், 071-8591727 என்ற இலக்கத்துக்கு அழைப்பை ஏற்படுத்தி, கொழும்பு குற்றப் பிரிவு பணிப்பாளருடன் தொடர்பினை ஏற்படுத்தி அறிவிக்குமாறும் அந்த இவறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## மாணவ தலைவருக்கு மறியல் நீடிப்பு

மருத்துவபீட பீட மாணவ செயற்குழு ஒருங்கிணைப்பாளர் ரயன் ஜெயலத் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். இன்று மாளிகாகந்தை நீதவான் நீதிமன்றத்தில் இவரை ஆஜர்படுத்திய வேளை, எதிர்வரும் 11ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு, உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 04.10.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.